# அவர் நமக்கு வேதவசனம் கொடுத்தார்: வியாக்கியானத்தின் அடித்தளங்கள்

பாடம் 2

## வியாக்கியானத்திற்கான ஆயத்தம்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

பரிசுத்த ஆவியை சார்ந்திருத்தல் ........ 2

வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் ........ 3

தெய்வீக ஆதாரம் ........ 8

மனித வழிமுறைகள் ........ 13

ஒளியூட்டுதல் ........ 14

மனித முயற்சியின் அவசியம் ........ 17

முக்கியத்துவம் ........ 17

தாக்கங்கள் ........ 20

விளக்கவுரை ........ 21

உரையாடல் ........ 22

அனுபவம் ........ 23

முடிவுரை ........ 25

# முன்னுரை

நாம் ஒரு திட்டத்தைத் தொடங்கும் போதெல்லாம், சரியான வகையான ஆயத்தங்களைச் செய்வது புத்திசாலித்தனமாகும். லூக்கா எழுதிய சுவிசேஷத்தில், ஒரு கோபுரத்தைக் கட்ட விரும்பிய ஒரு மனிதனை விவரித்தபோது இயேசுவே இந்த கருத்தை விளக்கினார், ஆனால் அவன் ஆயத்தமாக இல்லாததால் திட்டத்தை முடிக்கத் தவறிவிட்டான். ஆகவே, வேதவாக்கியங்களை வியாக்கியானம் செய்யும் போதும் இது தான் நடக்கிறது. வேதத்தைப் புரிந்துகொள்வது என்பது ஒரு சிக்கலான திட்டமாகும், இதற்கு எல்லா வகையான செயல்பாடுகளும் தேவைப்படுகிறது மற்றும் இது நம் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஒரு காரியமாகும். எனவே, வேதத்தை சரியான வழிகளில் வியாக்கியானம் செய்வதற்கு நாம் தயாராக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இது *அவர் நமக்கு வேதம் கொடுத்தார்* என்கிற நமது தொடரின் இரண்டாவது பாடம் ஆகும்: *வியாக்கியானத்தின் அடிப்படைகள்,* இது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் வேதத்தை எவ்வாறு வியாக்கியானம் செய்ய வேண்டும் என்பதை ஆராய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தொடராகும். இந்த பாடத்திற்கு *"வியாக்கியானத்திற்கான ஆயத்தம்"* என்று தலைப்பிட்டுள்ளோம், ஏனென்றால் வேதவாக்கியங்களை வாசித்து வியாக்கியானம் செய்வதற்கு முன்பு உதவியாக இருக்கும் சில விஷயங்களில் கவனம் செலுத்துவோம்.

இந்த பாடத்தில், வியாக்கியானத்திற்கான நம்முடைய தனிப்பட்ட ஆயத்தத்தின் இரண்டு முக்கிய கூறுகளைப் பார்ப்போம். முதலாவதாக, பரிசுத்த ஆவியின் ஊழியத்தில் நாம் சார்ந்திருத்தலைப் பற்றி பரிசீலிப்போம். இரண்டாவதாக, நமது சொந்த மனித முயற்சியின் தேவையை நிவர்த்தி செய்வோம். பரிசுத்த ஆவியானவரை நாம் சார்ந்திருப்பதை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# பரிசுத்த ஆவியை சார்ந்திருத்தல்

பரிசுத்த ஆவியைப் பற்றி நாம் குறிப்பிடும்போது, வெவ்வேறு கிறிஸ்தவர்கள் வெவ்வேறு வழிகளில் எதிர்வினையாற்றுகிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். நீங்கள் அன்றாட வாழ்க்கையில் அவரது பிரசன்னம் மற்றும் வல்லமையளித்தல் ஆகிய ஆவியின் வரங்களை வலியுறுத்தும் சபையைச் சேர்ந்தவராக இருக்கலாம். அல்லது விசுவாசிகளின் அன்றாட வாழ்க்கையில் ஆவியின் செயல்பாடு குறைவாக இருப்பதை போதிக்கும் சபையைச் சேர்ந்தவராக இருக்கலாம். வேதாகமத்தின் வியாக்கியானத்தில் பரிசுத்த ஆவியின் வேலையைப் பற்றி நாம் சொல்லப்போவது நம் ஒவ்வொருவருக்கும் உறுதியளிக்கும் மற்றும் சவால் விடும். நாம் வேதத்தை வியாக்கியானம் செய்யும்போது, ஆவியின் ஊழியத்திற்கு நாம் உணர்வுபூர்வமாக நம்மை அர்ப்பணிக்க வேண்டும், ஆனால் வேதமே இதை குறிப்பிட்ட வழிகளில் செய்ய நமக்கு கற்பிக்கிறது. பரிசுத்த ஆவியைப் புறக்கணிப்பது முட்டாள்தனத்தின் உச்சமாகும்; ஆனால் வேதம் போதிக்கும் வழிகளில் நாம் அவரைக் கவனிக்க வேண்டும். அப்படியானால், வேதவாக்கியங்களை நாம் வியாக்கியானம் செய்யும்போது பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருப்பதன் அர்த்தம் என்ன?

வேதாகமத்தைப் பற்றிய நமது வியாக்கியானத்தில் பரிசுத்த ஆவியானவர் முக்கிய பங்கு வகிக்கிறார் என்பதை பெரும்பாலான சுவிசேஷகர்கள் கோட்பாட்டளவில் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் நவீன கல்வி புத்தகங்கள் மற்றும் வேதாகம வியாக்கியானவியல் பற்றிய விரிவுரைகள் பெரும்பாலும் பரிசுத்த ஆவியின் பாத்திரத்தைப் பற்றி கவனம் செலுத்துவதில்லை. அதற்கு பதிலாக, நாம் பொதுவாக வேதாகம வியாக்கியானத்தை ஒரு தனிப்பட்ட நிகழ்வாக கருதுகிறோம், இது ஒரு வேத பகுதியைப் புரிந்துகொள்வதற்கான கொள்கைகள் அல்லது முறைகளின் பட்டியலை செயல்படுத்தும் ஒரு செயல்முறையாகும். ஆனால் வேதாகமக் கண்ணோட்டத்தில், வியாக்கியானவியல் அல்லது வேதாகமத்தின் வியாக்கியானம் மிகவும் தனிப்பட்டதாகும், ஏனெனில் இது மனித வியாக்கியான அறிஞர்களுக்கும் பரிசுத்த ஆவிக்கும் இடையிலான தொடர்புகளை உள்ளடக்கியது.

வியாக்கியானத்தில் பரிசுத்த ஆவியின் மீது சார்ந்திருத்தலானது குறைந்தது இரண்டு காரணங்களுக்காக முக்கியமானது. முதலாவதாக, ஆவியானவர் வேதாகமம் ஆவியால் அருளப்படுதலுக்கு ஆதாரமாக இருந்தார். இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவர் மனித வியாக்கியான அறிஞர்களுக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒளியூட்டுதலை அளிக்கிறார். முதலில் வேதம் ஆவியானவரால் ஏவப்பட்டதைக் குறித்துப் பார்ப்போம்.

## வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல்

எனது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு முக்கியமான நேரத்தில் எனக்கு உதவிய ஒரு பிரபலமான எழுத்தாளரை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஒருமுறை கிடைத்தது எனக்கு நினைவிருக்கிறது. அவருடன் அமர்ந்து, அவரது புத்தகங்கள் எனக்கு எவ்வளவு முக்கியம் என்பதைச் சொல்ல நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன். உரையாடலின் ஒரு கட்டத்தில், அவரது ஒரு புத்தகத்திலிருந்து நான் பெற்ற ஒரு பயனுள்ள நுண்ணறிவைப் பற்றி அவரிடம் சொன்னேன். ஆனால் எனக்கு ஆச்சரியமாக, அவர் என்னை நிமிர்ந்து பார்த்து, "நீங்கள் அதை எல்லாம் தவறாக புரிந்து கொண்டீர்கள்! நான் எழுதியது அதுவல்ல!" என்றார். நான் இதைக் கேட்டு சங்கடப்பட்டேன். ஆனால், ஆழ்ந்து மூச்சை இழுத்து, "சரி, புத்தகத்தை எழுதியவருக்கு அதன் பொருள் என்ன என்பது என்னை விட நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன்" என்று ஒப்புக்கொண்டது எனக்கு நினைவிருக்கிறது.

பல வழிகளில், வேதாகமத்திற்கும் இது பொருந்தும். தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் ஏவினார். இந்த அர்த்தத்தில், அவர் வேதாகமத்தின் ஆசிரியர் ஆவார். எனவே, அவரிடமிருந்து அவரது புத்தகத்தைப் பற்றிய நுண்ணறிவை நாம் பெற வேண்டும் என்பது மட்டுமே நியாயம். மிகவும் அடிப்படையான அர்த்தத்தில், பரிசுத்த ஆவியானவரால் வேதம் அருளப்படுதல் கோட்பாடானது பின்வருமாறு கூறுகிறது:

> பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வெளிப்பாட்டை வேதாகமமாக எழுத மனிதர்களைத் தூண்டி, மேலும் அவர்களின் எழுத்துக்களை பிழையற்றதாக மாற்றும் வகையில் அவர்களின் வேலையை மேற்பார்வையிட்டார்.

2 பேதுரு 1:20-21-ல் பேதுரு இந்த கருத்தை வெளிப்படுத்திய விதத்தைக் கவனியுங்கள்:

> வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேதுரு 1:20-21).

இந்த வேத பகுதியில், அனைத்து வேதாகம தீர்க்கதரிசனங்களும் பரிசுத்த ஆவியிலிருந்து தோன்றியதாகவும், தேவனுடைய வெளிப்பாட்டை எழுத ஆவியானவர் மனிதர்களைத் தூண்டினார் என்றும் பேதுரு கூறினார். இந்த செயல்முறை அவர்கள் எழுதியது முற்றிலும் உண்மை என்பதையும், மனித ஆசிரியர்களின் வார்த்தைகளும் தேவனுடைய வார்த்தைகள் தான் என்பதையும் உறுதி செய்தது. 2 தீமோத்தேயு 3:16-ல், வேதாகமம் முழுவதும் ஒரே மாதிரியாக ஏவப்பட்டதாக பவுல் சுட்டிக்காட்டினார்.

> வேதாகமம் என்பது ஆரம்பம் முதல் முடிவு வரை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த ஒரு அற்புதமான புத்தகமாகும், வாழ்க்கையின் அடிப்படை மற்றும் வாழ்க்கையின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் இது உண்மை. ஏனென்றால் அது பரிசுத்த ஆவியை ஆசிரியராகக் கொண்டுள்ளது, மேலும் பரிசுத்த ஆவியானவர் தனக்கு எதிராகச் செல்லவோ அல்லது தன்னை முரண்படவோ மாட்டார்… நீங்கள் எரேமியாவையோ பவுலையோ ஒபதியாவையோ யோனாவையோ வாசித்தாலும் பரவாயில்லை; அவர்கள் அனைவரும் வெவ்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள், ஆனால் அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள ஆவி ஒருவர் தான், ஏனென்றால் ஒரே ஆவியானவர் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைகளை ஏவினார்.
>
> – Rev. Dr. ஸ்டீபன் டோங், மொழிபெயர்ப்பு

பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தை எழுதுபவர்களுக்கு உத்வேகம் அளித்தார் என்ற கருத்துக்கு கிறிஸ்துவும் அவரது சீஷர்களும் உறுதிபூண்டிருந்தனர். கிறிஸ்துவைப் பின்பற்ற முயற்சித்தவர்கள், வேதாகமம் எந்த அர்த்தத்தில் ஏவப்பட்டது என்பதை கிட்டத்தட்ட எப்போதும் உறுதிப்படுத்தியுள்ளனர். அப்படியிருந்தும், கிறிஸ்தவ விசுவாசத்தைப் பின்பற்றுபவர்கள் பரிசுத்த ஆவியானவருடைய ஏவுதலின் தன்மையை வெவ்வேறு வழிகளில் புரிந்து கொள்ள முனைந்துள்ளனர்.

நம்முடைய நோக்கங்களுக்காக, நவீன சபையில் இருக்கும் ஆவியின் ஏவுதலைக் குறித்த முக்கியமான மூன்று பார்வைகளில் கவனம் செலுத்துவோம். முதலாவதாக, சிலர் ஏவுதலின் ”நேச” பார்வை என்று

அழைக்கப்படுவதை நம்புகிறார்கள். உலகப் பிரகாரமான கவிஞர்கள் அல்லது இசைக்கலைஞர்கள் எழுதத் தூண்டப்படுவதைப் போலவே பரிசுத்த ஆவியானவர் வேத எழுத்தாளர்களை தூண்டினார் என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்களின் பார்வையில், வேதம் என்பது தேவனுடைய பிழையற்ற சத்தியம் அல்ல, ஆனால் அவை மனித எழுத்தாளர்களின் தனிப்பட்ட பிரதிபலிப்புகள் மற்றும் கருத்துக்கள் மட்டுமே.

இரண்டாவதாக, ”இயந்திர” உத்வேகம் என்று நாம் அழைக்கக்கூடியதை மற்ற கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். இந்த கண்ணோட்டத்தின்படி, வேத எழுத்தாளர்கள் வேதத்தை எழுதியபோது செயலற்றவர்களாக இருந்தனர். பரிசுத்த ஆவியானவர் காரியங்களை சொல்ல சொல்ல, மனித எழுத்தாளர்கள் அப்படியே பதிவு செய்தனர்.

மூன்றாவதாக, பெரும்பாலான சுவிசேஷ கிறிஸ்தவர்கள் ஆவியின் உத்வேக ஊழியம் ”இயற்கையானது” என்று உறுதிப்படுத்துகிறார்கள். இந்த கண்ணோட்டத்தின் படி, பரிசுத்த ஆவியானவர் மனித எழுத்தாளர்களை எழுத தூண்டினார் மற்றும் அவர்களின் வார்த்தைகளை மேற்பார்வையிட்டு அவர்கள் எழுதியவைகளை இயக்கியுள்ளார். இதன் விளைவாக, வேதத்தின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளாக இருக்கின்றன. அதே வேளையில், மனித எழுத்தாளர்களின் ஆளுமைகள், அனுபவங்கள், கண்ணோட்டங்கள் மற்றும் நோக்கங்களை பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தினார். எனவே, வேதத்தின் சொற்களும் அதன் மனித எழுத்தாளர்களின் சொற்களாகவே இருக்கின்றன. இந்த மூன்றாவது கண்ணோட்டம் வேதம் ஆவியானவரால் அருளப்படுதலின் தன்மை பற்றிய வேதத்தின் சொந்த சாட்சியத்தை சிறப்பாக பிரதிபலிக்கிறது.

> வேதாகமத்தை வாசிப்பது மிகவும் கவர்ச்சிகரமான செயல்முறையாகும், ஏனென்றால் இது நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக பல எழுத்தாளர்களால் உருவாக்கப்பட்டது, எனவே அந்த ஆளுமைகள் அவர்கள் எழுதும் விதத்திலும், அவர்களைச் சுற்றியுள்ள மக்களுடன் தொடர்பு கொள்ளும் விதத்திலும், அவர்கள் பயன்படுத்தும் மொழியிலும் வெளிப்படுவதை நீங்கள் காண முடியும். எனவே, அவர்களுடைய ஆளுமைகள் தேவனுடைய வார்த்தைக்கு முக்கியமானவை, ஏனென்றால் தேவன் அவற்றை பல வழிகளில் பயன்படுத்துகிறார். எடுத்துக்காட்டாக, உங்களிடம் ஆசாரியர்களும் விவசாயியும் ஆடு மேய்ப்பவரும் ராஜாவும் மருத்துவரும் எழுதுபவர்களாக இருக்கிறார்கள், மற்றும் நமது கலாச்சாரத்தில், ”எபிரெய பல்கலைக்கழகத்தில்” முனைவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பட்டம் பெற்ற ஒருவரைப் போன்றவரான அப்போஸ்தலனாகிய பவுல் பழைய ஏற்பாட்டு மற்றும் கிரேக்க கலாச்சாரம் மற்றும் கிரேக்க மொழி ஆகியவற்றில் அசாதாரணமான புரிதலைக் கொண்டுள்ளார், மேலும் கிரேக்க மொழியை எடுத்து இறையியல் சிந்தனையின் வெளிப்பாட்டிற்கு அதன் பொருத்தத்தை எடுக்கக் கூடியவராகவும் இருக்கிறார்.
>
> – Dr. ஹோவர்ட் ஐரிச்

உதாரணமாக, 2 பேதுரு 3:15-ல் பேதுரு ஆவியானவருடைய ஏவுதலின் இயல்பான தன்மையை விவரித்த விதத்தை கவனிக்கவும்:

> நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான் (2 பேதுரு 3:15).

இந்த பகுதியில் பேதுரு பவுலின் நிருபங்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தினார். ஒரு புறம், ”பவுல் எழுதினார்” என்று அவர் கூறினார். எனவே, பேதுரு தன்னுடைய நிருபங்களில் பவுலின் ஈடுபாட்டை உறுதிப்படுத்தினார். ஆனால் மறுபுறம், பேதுரு இந்த நிருபங்களை பவுல் எழுதினார் என்று மட்டும் சொல்லவில்லை. மாறாக, ”தேவன் கொடுத்த ஞானத்தைக் கொண்டு” பவுல் எழுதினார் என்று அவர் குறிப்பிட்டார். பவுலின் நிருபங்கள் பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலின் காரணமாக தேவ ஞானத்தை பிரதிபலித்தன.

> வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டது என்பது தேவனுடைய வார்த்தையைப் பற்றிய உண்மையாகும். அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒரு உண்மையான மனிதனால் எழுதப்பட்டன, மேலும் ஒரு அற்புதமான வழியில் எழுதப்பட்டன, அந்த வேதாகம எழுத்தாளர்கள் ஒவ்வொருவரின் வரங்களையும் அனுபவங்களையும் தேவன் சர்வாதிகாரத்துடன் மேற்பார்வையிட்டார், இதனால் அவர்களுடைய ஆளுமை மற்றும் இலக்கிய பாணியை அங்கே பார்க்க முடியும், அதே நேரத்தில் வேதம் தேவனுடைய வார்த்தையாகவும் இருந்தது. ஆகவே தேவனுடைய வார்த்தைக்கும் இது பொருந்தும். உதாரணமாக, நீங்கள் எரேமியாவை வாசிக்கும்போது, தேவ ஜனங்கள் மீதான அவரது துக்கத்தையும் ஆர்வத்தையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நீங்கள் உணர்கிறீர்கள்; நீங்கள் லூக்கா எழுதிய சுவிசேஷத்தை வாசிக்கும்போது, மருத்துவ விவரங்களில் அவரது கவனமான பார்வையையும், துல்லியமான வரலாற்றின் மீதான அவரது அன்பையும் நீங்கள் உணர்கிறீர்கள். அதாவது, இந்த வேதாகம எழுத்தாளர்களின் ஆளுமைகளும் அவர்களின் அனுபவங்களும் வேதாகமத்தில் பிரகாசிக்கின்றன, ஆனால் தேவனுடைய வார்த்தையில் தேவனுக்கு இருக்கும் அதிகாரத்தையும் உத்வேகத்தையும் வல்லமையையும் இழக்காமல் இது நிகழ்கிறது.

– Dr. பிலிப் ரைகென்

வேதாகமத்தை வாசிக்கும் எவரும் பாணிகள் வேறுபடுவதையும், வெவ்வேறு எழுத்தாளர்கள் தங்களை வெளிப்படுத்தும் வெவ்வேறு வழிகள் மற்றும் இந்த எழுத்தாளர்கள் உள்ளடக்கத்தை முன்வைக்க எடுக்கும் வெவ்வேறு வகையான தேர்வுகள் காரணமாக எழுத்தாளர்கள் தங்கள் சொந்த வரங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் காணலாம். எடுத்துக்காட்டாக, சுவிசேஷங்களில் செயல்முறை காட்சிகளில் அதிகம் ஈடுபடாத மாற்கு இருக்கிறார் … அல்லது, அவைகளில் அதிகம் ஈடுபடுகிறவராக இருக்கிறார், ஆனால் அவரது சொற்பொழிவுகளை குறைந்தபட்சமாக வைத்திருக்கிறார், அதே நேரத்தில் யோவானின் சுவிசேஷம் சொற்பொழிவுகளால் நிரம்பியுள்ளது, இது வேறுபட்ட ஆர்வத்தை பிரதிபலிக்கிறது. எனவே இந்த எழுத்தாளர்கள் தங்கள் சொந்த பாணியிலிருந்தும், தங்கள் சொந்த பின்னணியிலிருந்தும் மற்றும் தங்கள் சொந்த வார்த்தைகளிலிருந்தும் எழுதுகிறார்கள், அந்த பகுதிகளில் உள்ள பல்வேறு புத்தகங்களுக்கு இடையிலான வேறுபாடுகளிலிருந்து இது தெளிவாகிறது. அவர்கள் சொல்வதை வழிநடத்தவும், அவர்கள் சொல்வதற்குப் பின்னால் நிற்கவும் தேவன் அவர்களுக்கு ஊக்கமளிக்கிறார், ஆனால் அவர் அதை அவர்களின் சொந்த வழியில் வெளிப்படுத்த அனுமதிக்கிறார்.

– Dr. டாரல் எல்.பாக்

வியாக்கியானத்தின் பணிக்கு நம்மை திசைதிருப்ப உதவும் இயற்கையான ஏவுதலின் இரண்டு முக்கிய அம்சங்களை நாம் தொடுவோம், அவையாவன: முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தின் தெய்வீக ஆதாரமாக இருந்தார் என்ற உண்மை; இரண்டாவதாக, வேதத்தை உருவாக்க அவர் மனித வழிகளில் வேலை செய்தார் என்ற உண்மை. வேதாகமத்தின் இறுதி தெய்வீக ஆதாரம் ஆவியானவர் என்கிற கருத்தை முதலில் பார்ப்போம்.

## தெய்வீக ஆதாரம்

எல்லா வேத வாக்கியங்களையும் ஏவியவர் என்ற முறையில், பரிசுத்த ஆவியானவர் வேதத்தின் அர்த்தத்தையும், அந்த அர்த்தத்தை அது தெரிவிக்கும் விதத்தையும் பற்றி நெருக்கமான அறிவைக் கொண்டுள்ளார். எனவே, வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்கு ஆயத்தமாவதில் பரிசுத்த ஆவியானவரை அவற்றின் இறுதி எழுத்தாளராக தனிப்பட்ட முறையில் அணுகுவது அடங்கும். நாம் வேதவாக்கியங்களை பணிவோடு, அவருக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து அணுக வேண்டும்.

> வேதத்தைப் பற்றிய ஆழமான புரிதலுக்காக பரிசுத்த ஆவியை நம்புவது அவசியம் என்று நான் நினைக்கிறேன். வேதத்தின் செய்தியைப் புரிந்துகொள்வதற்கு ஒருவர் பரிசுத்த ஆவியை நம்ப வேண்டியதில்லை என்பது தெளிவாகிறது என்று நான் நினைக்கிறேன். அப்படி இருந்தால், வேதத்திற்கு சுவிசேஷ வேலை இருக்காது. ஆனால் அதை ஆழமாக புரிந்து கொள்ள, பரிசுத்த ஆவியானவரை நம்புவது முற்றிலும் முக்கியமானது என்று நினைப்பதற்கு நல்ல காரணம் உள்ளது. நிச்சயமாக, அதற்கான காரணம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தை எழுதியவர்களை ஏவினார் என்ற அதன் கூற்றை திருச்சபை நம்புகிறது, என்று நான் நிச்சயமாக உடன்படுகிறேன். எனவே, பரிசுத்த ஆவியானவர் இந்த எழுத்தாளர்கள் மூலம் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு, நாம் அந்த ஆவிக்குரிய மூலத்துடன் தொடர்பில் இருக்க வேண்டும்.
>
> – Dr. டேவிட் ஆர். பாவுர்

பல சந்தர்ப்பங்களில், வேதாகம ஆசிரியர்கள் வேதாகமத்தைக் கையாளும்போது பரிசுத்த ஆவியின் ஏவுதலை வெளிப்படையாகவும் நேரடியாகவும் ஒப்புக்கொண்டனர். மனித எழுத்தாளர்களின் பங்கை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மறுக்காமல், பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தின் இறுதி ஆசிரியர் என்பதை அவர்கள் அங்கீகரித்தனர். எடுத்துக்காட்டாக, அப்போஸ்தலர் 4:25-ல், பேதுருவும் யோவானும் சங்கீதம் 2-ன் உறுதிமொழியில் சபையை வழிநடத்தினார்கள்:

> தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே (அப்போஸ்தலர் 4:25).

அதே போல, எபிரெயர் 3:7-8 சங்கீதம் 95:7-8 பற்றி இவ்வாறு பேசுகிறது:

> பரிசுத்த ஆவியானவர் பின்வருமாறு கூறுகிறார்: "வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபிரெயர் 3:7-8).

இந்த மற்றும் பல வேத பகுதிகளில், வேதாகம எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவரை தூண்டுகோலாக அடையாளம் கண்டனர், எனவே, அவர் தான் வேதாகமத்தின் இறுதி ஆசிரியர் ஆவார். வேதவாக்கியங்களைப் படிக்கவும், வியாக்கியானம் செய்யவும், பிரயோகிக்கவும் அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டதால், பரிசுத்த ஆவியின் ஏவுதலைப் பற்றிய இந்த புரிதலை அவர்கள் நம்பினர்.

வேதாகமத்தின் தெய்வீக தோற்றத்தின் மிக முக்கியமான உட்குறிப்புகளில் ஒன்று எந்த வித வேதத்தின் கேள்வியில்லாத உண்மைத்தன்மையாகும். துரதிர்ஷ்டவசமாக, அவ்வப்போது, நல்லெண்ணம் கொண்டவர்கள் வேதத்தினுடைய ஏவுதலில் ஆவியின் ஈடுபாட்டை நம்புவதாகக் கூறுகிறார்கள், ஆனால் பரிசுத்த ஆவியானவர் வேதவாக்கியங்களை பிழையிலிருந்து பாதுகாத்தார் என்பதை அவர்கள் உறுதிப்படுத்தவில்லை. ஆனால் யோவான் 14:16-17-ல் பரிசுத்த ஆவியைப் பற்றி இயேசு சொன்னதைக் கவனிக்கவும்:

> அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் – சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் (யோவான் 14:16-17).

இயேசு பரிசுத்த ஆவியை "சத்திய ஆவி" என்று அழைத்தபோது, பரிசுத்த ஆவியானவர் முற்றிலும் உண்மையைப் பேசுகிறவர் என்பதை சுட்டிக்காட்டினார். எனவே, ஆவியால் ஏவப்பட்ட வேதவாக்கியங்களும் முற்றிலும் உண்மை என்று நாம் உறுதியாக நம்பலாம். வேத வாக்கியங்கள் பொய் சொல்வதில்லை; அவைகள் முரண்படுவதில்லை. எனவே, பரிசுத்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆவியானவர் மற்றும் அவர் ஏவிய வேதவசனங்களின் முழுமையான நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதே வியாக்கியானத்திற்கான நமது ஆயத்தத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

> தேவனுடைய வார்த்தை ஏவப்பட்டது. தியோப்நியுஸ்டோஸ் என்கிற தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட கிரேக்க வார்த்தை இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. அது தேவனுடைய நாசியிலிருந்து வந்தது என்று பவுல் தீமோத்தேயுவிடம் கூறுகிறார். அது தேவனுடைய நாசியிலிருந்து வந்தது என்றால், ஆதாரம் பரிபூரணமானது மற்றும் அழியாதது, அவரிடமிருந்து எது வந்தாலும் அது சமமாக பரிபூரணமானதும் அழியாததுமாயிருக்கும் என்பதை நாம் அறிவோம். அதுதான் பரிசுத்த ஆவியினால் ஏவப்படுதல் ஆகும். ஆவியானவர் அதை ஏவியிருந்தால், அவர் என்னுள் வாசம் செய்தால், நான் வார்த்தையை வாசிக்கும்போது, நான் ஒய்வெடுக்க வேண்டும் மற்றும் எனக்கு வெளிச்சத்தையும் புரிதலையும் கொடுக்க ஆவியை நம்ப வேண்டும், ஏனென்றால் என் ஆய்வு முதலாவதாக வார்த்தையை ஏவியவரின் புரிதலை அடிப்படையாகக் கொண்டது. ஒரு புத்தகத்தின் ஆசிரியரை விட சிறந்த ஆசிரியர் இருக்க முடியாது, புத்தகத்தின் ஆசிரியர் ஆவியானவர் ஆவார். எனவே, நம் மனதை ஒளிரச் செய்யும் ஆசிரியர் ஆவியானவராக இருக்கும்போது, முதலில் அதை எழுதிய ஆசிரியரை விட, சொல்லப்பட்டதையும் ஏவப்பட்டதையும் பற்றி எனக்கு சிறந்த புரிதலைக் கொடுக்க வேறு யாராலும் முடியாது.
>
> – Dr. மிகுவேல் நுனெஸ், மொழிபெயர்ப்பு

ஹிப்போவில் வாழ்ந்த ஆயரான அகஸ்டின் தனது கடிதம் 82, அத்தியாயம் 1, பத்தி 3 இல் இந்த நம்பிக்கையை வெளிப்படுத்தினார், அங்கு அவர் இந்த வார்த்தைகளை பின்வருமாறு எழுதினார்:

> இந்த மரியாதையையும் கனத்தையும் வேதாகம நூல்களுக்கு மட்டுமே கொடுக்க நான் கற்றுக்கொண்டேன்: இவற்றில் http://www.newadvent.org/cathen/02408b.htm நூலாசிரியர்கள் பிழையிலிருந்து முற்றிலும் விடுபட்டவர்கள் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அகஸ்டினின் வார்த்தைகள் ஆரம்பகால திருச்சபையில் வேதாகமத்தின் உண்மைத்தன்மை குறித்து நிலவிய கண்ணோட்டத்தை விளக்குகின்றன, மேலும் வேதத்தில் கற்பிக்கப்பட்ட கண்ணோட்டத்தை பிரதிபலிக்கின்றன.

இப்போது, வேதாகமத்தின் பல பகுதிகள் சிறந்த வியாக்கியான அறிஞர்களுக்குக் கூட சவால் விடுகின்றன என்பதை வேதத்தை அறிந்த அனைவரும் அறிவார்கள். அவ்வப்போது, வேதவசனங்கள் அறிவியலுக்கும், நமது தனிப்பட்ட அனுபவங்களுக்கும், வேதாகமத்தின் பிற பகுதிகளுக்கும் முரணாக இருப்பது போலத் தோன்றுகின்றன. இந்த வெளிப்படையான பிரச்சனைகளை நாம் எவ்வாறு கையாள வேண்டும்? வியாக்கியான அறிஞர்கள் இந்த வகையான சிக்கல்களைக் கையாள பல்வேறு வழிகளைக் கொண்டுள்ளனர். பெரும்பாலும், அவற்றின் தீர்வுகள் வேதாகமத்தின் தன்மையால் அல்ல, மாறாக தேவனைப் பற்றிய வியாக்கியான அறிஞர்களின் மனப்பான்மையால் வேறுபடுகின்றன.

ஒருபுறம், பரிசுத்த ஆவியானவர் அதிகாரப்பூர்வமாக வேதத்தை ஏவினார் என்பதை மறுப்பவர்கள் வேதவாக்கியங்களை விமர்சன ரீதியாக வியாக்கியானம் செய்கிறார்கள், இது ஆவியின் அதிகாரத்தின் மீதான தங்கள் சொந்த புரிதலை உயர்த்துகிறது. மறுபுறம், ஆவியானவரின் அதிகாரப்பூர்வ ஏவுதலை அங்கீகரிப்பவர்கள், வேதமானது உண்மையாகவும் இணக்கமாகவும் இருக்கும் என்று எதிர்பார்த்து, அதன் உண்மைத்தன்மையை நிரூபிக்கவோ விளக்கவோ முடியாவிட்டாலும் கூட, கீழ்ப்படிந்து வாசிக்கிறார்கள்.

> நாம் வேதாகமத்திற்கு வரும்போது இன்னொரு மனித புத்தகத்திற்கு மட்டும் வருவதில்லை. தேவனால் அற்புதமாக ஏவப்பட்ட ஒரு புத்தகத்திற்கு நாம் வருகிறோம். அதாவது, இன்னொரு புத்தகத்தை வாசிப்பத்து போல வேதத்தை வாசிக்க முடியாது. தேவன் நம் மொழியில், நம் பாணிகளில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார் என்றுதான் சொல்ல வேண்டும், எனவே அங்கு என்ன இருக்கிறது என்பதற்கான எளிய இலக்கிய வியாக்கியானத்தில் இருந்து தொடங்குகிறோம். ஆனால் நாம் அங்கே நிறுத்தினால், இது ஒரு பரிசுத்தமான புத்தகம் என்பதை நாம் மறந்துவிடுகிறோம், இது ஆரம்பத்தில் தேவனால் ஏவப்பட்டது மட்டுமல்லாமல், நம் இருதயங்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கிறது, என் மானிட தவறும், என் மனித பாவமும் வேதத்தின் உண்மையை வெல்லாமல் இருக்க, இந்த வேத பகுதியின் மூலம் தேவன் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்ள வாசகனாகவும் வியாக்கியான அறிஞராகவும் பரிசுத்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆவியானவர் என்னுள் தொடர்ந்து வேலை செய்ய வேண்டும்.

– Dr. ஜான் ஆஸ்வால்ட்

வியாக்கியானத்தில் பரிசுத்த ஆவியின் பங்கு என்ன? இது மிக முக்கியமான கேள்வியாகும். ஒன்று, பரிசுத்த ஆவியானவர் வேதத்தை ஏவினார், எனவே வேதாகமத்தின் பிரதான ஆசிரியர் யார் என்பதையும், அவரைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளக்கூடியவற்றையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள விரும்புகிறோம். பரிசுத்த ஆவியானவர்தான் தேவன் யார் என்பதைப் பற்றி வார்த்தையின் மூலம் நமக்கு கற்பிக்கிறார். இரண்டாவது விஷயம் என்னவென்றால், வேதாகமத்தை சரியாகப் புரிந்துகொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் முற்றிலும் அவசியம். 1 கொரிந்தியர் 2-ல் இதைப் பற்றிப் பேசப்படுகிறது. 14-ம் வசனத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது:

ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான் (1 கொரிந்தியர் 2:14).

அத்தகைய மனிதனில் தான் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். ஆகவே, பரிசுத்த ஆவியை அனுப்பி, அவருடைய வார்த்தையில் அவர் போதிப்பதை நாம் உண்மையாக பெறுவதற்காக அவருடைய ஆவியால் நம்மை நிரப்பும்படி தேவனிடம் கேட்க வேண்டும்.

– Dr. வெர்ன் போய்திரெஸ்

பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தின் தெய்வீக ஆதாரம் என்ற உண்மையைப் பார்த்த பிறகு, நாம் குறிப்பிடும் இயற்கையான ஏவுதலின் கோட்பாட்டின் இரண்டாவது அம்சம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் வேதவாக்கியங்களை உருவாக்க மனித வழிமுறைகளைப் பயன்படுத்தினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## மனித வழிமுறைகள்

மார்மன்களும் இஸ்லாமியர்களும் தங்கள் பரிசுத்த புத்தகங்களை நேரடியாகப் பெற்றதைப் போல சில நேரங்களில் கிறிஸ்தவர்கள் நேரடியாக தேவன் வேதத்தை கொடுத்திருந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணுகிறார்கள். மார்மன் புஸ்தகத்தை கடவுள் ஜோசப் ஸ்மித்திடம் முழு வடிவில் வழங்கினார் என்று மார்மன்கள் நம்புகிறார்கள், மேலும் இஸ்லாம் பரலோகத்திலிருந்து இறங்கும் குரானைப் பற்றி இதேபோன்ற கூற்றை முன்வைக்கிறது. ஆனால் தேவன் நமக்கு வேதத்தைக் கொடுத்தது இப்படியல்ல.

அதற்குப் பதிலாக, தேவன் மனித எழுத்தாளர்கள் மூலம் வேதவாக்கியங்களை இயற்றினார்; பல்வேறு மனிதர்களின் வரங்கள் மற்றும் திறன்கள் மூலம் அவர் தன்னை வெளிப்படுத்தினார். சந்தேகத்திற்கு இடமின்றி, பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தில் மனித எழுத்தாளர்களின் தாக்கத்தையோ இருப்பையோ அகற்றியிருக்கலாம். ஒரு பகுதி ஒருவரால் எழுதப்பட்டது என்றும், மற்றொரு பகுதி இன்னொருவரால் எழுதப்பட்டது என்றும் நாம் ஒருபோதும் சொல்ல முடியாதபடி அவர் ஒவ்வொரு பகுதியையும் வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. தனது எல்லையற்ற ஞானத்தில், அவர் மனித எழுத்தாளர்களின் கருத்துக்கள், நோக்கங்கள் மற்றும் ஆளுமைகள் மூலம் ஈடுபடவும் பணியாற்றவும் முடிவு செய்தார். எனவே, வேதாகமத்தைப் பற்றிய நமது வியாக்கியானத்தில் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருப்பதன் ஒரு பகுதி, அவர் வேதவாக்கியத்தை இயற்கையாகவே தூண்டிய விதத்தை மதிப்பதும், அவரால் ஏவப்பட்ட மனித எழுத்தாளர்களை நம்புவதும் ஆகும். எனவே, வேதத்தை அவர் விரும்பும் விதத்தில் நாம் வியாக்கியானம் செய்யப் போகிறோம் என்றால், வேத வாக்கியங்கள் வெவ்வேறு மக்களால் எழுதப்பட்டவை என்பதையும், அவை அந்த மனித எழுத்தின் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கின்றன என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக, சுவிசேஷ எழுத்தாளர்களான மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் அடிப்படையில் இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் அதே நிகழ்வுகளை உள்ளடக்கினர். ஆனால் அவர்களின் புத்தகங்கள் ஒரே மாதிரியாக இல்லை. மத்தேயு மாற்குவிலிருந்து வேறுபட்டவர். மாற்கு லூக்காவிலிருந்து வேறுபட்டவர். லூக்கா யோவானிடமிருந்து வேறுபட்டவர். மேலும் இது வேதாகமத்தின் குறைபாடு அல்ல. பரிசுத்த ஆவியானவர் வேதவாக்கியங்களை ஏவுவதற்கு தேர்ந்தெடுத்த விதத்தின் விளைவு இது.

வேத வாக்கியங்கள் இயற்கையாகவே ஏவப்பட்டவை என்பதால், அவற்றின் தெய்வீக ஆசிரியர் மற்றும் அவற்றின் மனித ஆசிரியர் ஆகிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருவரையும் நாம் எப்போதும் அங்கீகரிக்க வேண்டும். வேதத்தை வியாக்கியானம் செய்வதற்கு நாம் நம்மைத் ஆயத்தப்படுத்தும்போது, பரிசுத்த ஆவியானவர் எதைக் குறிக்கிறார் என்பதை நினைவில் கொள்வது அவசியம். ஆனால் அங்கேயே நின்றால், நம்முடைய ஆயத்தமானது முழுமையடையாது. மனிதர்கள், அவர்களின் ஆளுமைகள், அவர்களின் அனுபவங்கள் மற்றும் கண்ணோட்டங்கள் மூலம் ஆவி எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தையும் தேவனுடைய வார்த்தையாகும். ஆனால் தேவனுடைய வார்த்தை ஆவியால் ஏவப்பட்ட மனிதர்கள் மூலமாக நமக்கு வருகிறது, அவர்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வழிகளில் எழுதினார்கள். எனவே, தேவனுடைய ஆவியானவர் வேதத்தின் பல்வேறு மனித எழுத்தாளர்கள் மூலம் பல்வேறு வழிகளில் பேசினார் என்ற புரிதலோடு நாம் எப்போதும் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

வேதாகமத்தின் ஏவுதல் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியத்தை எப்படிக் கோருகிறது என்பதைப் பார்த்தபின், அவருடைய ஒளியூட்டும் வேலையை நாமும் சார்ந்திருக்கும் விதத்தில் நம் கவனத்தைத் திருப்புவோம்.

## ஒளியூட்டுதல்

வேதாகம வியாக்கியான சூழலில், ஒளியூட்டுதல் பின்வருமாறு வரையறுக்கப்படலாம்:

> வேதாகமத்தைப் பற்றிய சரியான புரிதலை ஒரு மனிதனுக்குத் தெரிவிக்கும் பரிசுத்த ஆவியின் பணி

> நாம் இரண்டு வேலைகளை வேறுபடுத்தலாம். ஒன்று, பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தின் அசல் மனித ஆசிரியர்களுக்கு வல்லமையூட்டும் ஏவுதலின் வேலையாகும். இதனால் அவர்கள் எழுதுவது வெறும் மனித வார்த்தையாக மட்டுமல்லாமல் தேவனுடைய வார்த்தையாகவும் இருந்தது. பரிசுத்த ஆவியானவர் நம்மோடு நிற்கும் இடம் ஒளியூட்டுதல் ஆகும். அவர் கிறிஸ்தவ விசுவாசிகளை உற்சாகப்படுத்துகிறார், மற்றும் வேதத்தில் அவர் ஏவப்பட்டதைப் புரிந்துகொள்ளவும் பெறவும் நம் மனதைத் திறக்கிறார்.
>
> – Dr. வெர்ன் போய்திரெஸ்

பரிசுத்த ஆவியானவர் தம்முடைய ஒளியூட்டுதலின் மூலம் தம்முடைய வார்த்தையைப் பற்றிய அறிவை நமக்கு அளிக்கிறார். இந்த அறிவு முற்றிலும் அறிவாற்றல் சார்ந்தது அல்ல. இது நமது கற்பனை, உள்ளுணர்வு, உணர்ச்சி, விருப்பம், உந்துதல், ஆசை, தார்மீக மனசாட்சி ஆகியவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வேதாகமத்தைப் புரிந்துகொள்வதற்கு பங்களிக்கும் நம்மில் எந்தப் பகுதியும் ஆவியால் ஒளியூட்டப்படலாம்.

நாம் கவனமாக சிந்தித்தால், வேதவசனங்கள் என்ன கற்பிக்கின்றன என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும் என்று சில நேரங்களில் கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில், தேவனுடைய விஷயங்களை நாமே புரிந்து கொள்ள முடியாத படி, மனிதர்கள் பாவத்தால் மிகவும் ஆழமாக பாதிக்கப்பட்டுள்ளனர். நமக்கு ஒளியூட்டுவதற்கு பரிசுத்த ஆவியாகிய தேவனே மிகவும் தேவை. 1 கொரிந்தியர் 2:11-13-ல் ஆவியின் ஒளியூட்டுதலைப் பற்றி பவுல் எப்படிப் பேசினார் என்பதைக் கவனிக்கவும்:

> மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக்காண்பிக்கிறோம் (1 கொரிந்தியர் 2:11-13).

இங்கே, ஆவியின் கிரியை இல்லாமல், தேவனுடைய எண்ணங்களை நாம் உள்வாங்கிக்கொள்ளும் நம்பிக்கை இல்லை என்று பவுல் விளக்கினார். அதனால்தான் வேதாகமத்தைப் பற்றிய நமது வியாக்கியானத்திற்கு ஆவியின் தனிப்பட்ட ஒளியூட்டுதல் மிகவும் முக்கியமானது.

ஆவியின் ஒளியூட்டுதல் என்பது அதிகமாக விளக்கப்படாத ஒரு விஷயமாகும். ஆனால் மிக முக்கியமாக இதைப் பற்றியதான ஒன்று 1616 முதல் 1683 வரை வாழ்ந்த ஜான் ஒவனின் நன்கு அறியப்பட்ட எழுத்தில் காணப்படுகிறது. *வேதாகமத்திலிருந்து நிரூபிக்கப்பட்ட ஆவிக்குரிய ஒளியூட்டுதல் (Spiritual Illumination Proved From Scripture*) என்ற ஒவனின் படைப்பில், அவர் பரிசுத்த ஆவியின் ஒளியூட்டுதலை இவ்வாறு சுருக்கமாகக் கூறினார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நாம் விசுவாசத்துடனும் கீழ்ப்படிதலுடனும் தேவனுக்காக வாழ்வதற்கும், அல்லது கிறிஸ்துவுக்குள் வந்து நிலைத்திருப்பதற்கும், நம்மை வஞ்சிப்பவர்களிடமிருந்து பாதுகாக்கப்படவும் தெய்வீக வெளிப்பாடுகளில் நமக்கு முன்மொழியப்பட்ட எல்லா தெய்வீக சத்தியங்களும் அறியப்படவும், நம்பப்படவும் வேண்டும். இவைகளை, குறிப்பிட்ட இறுதி வரை, நம்மால் புரிந்து கொள்ள முடியாது; நம்மால் முடிந்தால், பரிசுத்த ஆவியானவரால் கற்பிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால், இவைகளையெல்லாம் அவர் நமக்குக் கற்பிக்கிறார், மேலும் அவற்றைப் புரிந்துகொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் நமக்கு உதவுகிறார்.

"விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் தேவனுக்காக வாழ்வதற்கும்" "கிறிஸ்துவுக்குள் வந்து நிலைத்திருப்பதற்கும்" "வஞ்சகர்களிடமிருந்து பாதுகாக்கப்படுவதற்கும்" நமக்குத் தேவையான அனைத்தையும் வேதாகமம் நமக்குக் கொடுக்கிறது என்று ஒவன் புத்திசாலித்தனமாக சுட்டிக்காட்டினார். ஆனால், அவிசுவாசிகளும் வேதத்திலிருந்து தாங்களாகவே புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு இருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் நமக்கு "பகுத்தறிந்து, புரிந்துகொள்ள, ஒப்புக்கொள்ள" உதவாவிட்டால், வேதாகமத்தை "இந்த நோக்கங்களுக்காக" "நம்மால் புரிந்து கொள்ள முடியாது".

> வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் கொடுக்கப்பட்டது 2 தீமோத்தேயு 3:16 என்று சொல்வதன் அர்த்தம் என்னவென்றால், வேதம் தேவனுடைய இருதயத்திலிருந்து ஏவப்பட்டது, அல்லது இன்னும் துல்லியமாக "தேவனிலிருந்து வெளிப்பட்டது" என்பதாகும். எனவே வேதம் தேவனாகிய நபரிலிருந்து வருகிறது என்ற கருத்தை இது குறிக்கிறது. ஏதோ ஒன்றினால் உத்வேகமடைதலைப் பற்றி நாம் பேசும்போது, உற்சாகமாக இருப்பது அல்லது எதையாவது புரிந்துகொள்வது பற்றிப் பேசுகிறோம், மேலும் "ஒளியூட்டுதல்" என்ற வார்த்தை அந்த கருத்தைப் பற்றியது, தேவனுடைய வார்த்தை தவறில்லாமல் இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் ஏவிய நமக்கு பயத்தையும் புரிதலையும் கொடுக்க வேண்டும், இதனால் தேவனுடைய சத்தியத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்வதற்காக நம் மனங்கள் தேவனுடைய சத்தியத்தால் ஒளியூட்டப்படலாம்.

– Dr. சைமன் வைபர்ட்

> தேவன் எழுத்தாளருக்கு உத்வேகம் அளித்தபோது அவர் செய்ததே ஏவுதலாகும், எனவே, நாம் இப்போது ஏவப்படுவதில்லை. ஆனால் நாம் ஒளியூட்டப்படுகிறோம், அதாவது தேவன் பரிசுத்த ஆவியின் மூலம், ஒளியை உதிர்த்து, ஆவிக்குரிய பகுத்தறிதலை நமக்குக் கொடுக்கிறார், இந்த வார்த்தைகள் என்ன சொல்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள உதவும் திறனை நமக்குக் கொடுக்கிறார்.

– Rev. தாட் ஜேம்ஸ், Jr.

பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருப்பது எவ்வளவு முக்கியம் என்பதை இப்போது நாம் பார்த்தோம், வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்கான நமது ஆயத்தத்தின் ஒரு பகுதியாக மனித முயற்சியின் அவசியத்தை ஆராய்வோம்.

# மனித முயற்சியின் அவசியம்

மனித முயற்சியின் அவசியத்தை இரண்டு பகுதிகளாகப் பார்ப்போம். முதலில், மனித முயற்சியின் முக்கியத்துவத்தைப் பார்ப்போம். இரண்டாவதாக, நமது மனித முயற்சிக்கு காரியங்களை தெரிவிக்கும் சில தாக்கங்களை ஆராய்வோம். முதலில் மனித முயற்சியின் முக்கியத்துவத்திற்கு வருவோம்.

## முக்கியத்துவம்

வேதாகம வியாக்கியானத்தில் தேவனுடைய ஆவியின் கிரியையானது மனித முயற்சிக்கு எதிரானது என்று நல்லெண்ணம் கொண்ட கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் நினைக்கிறார்கள். நாம் வேதத்தைப் படிக்கும்போது சில நேரங்களில் ஆவியானவர் நம் முயற்சிகளுக்கு அப்பாலும், அவை இல்லாமலும், அவர்களுக்கு எதிராகவும் கூட செயல்படுகிறார் என்பது உண்மைதான். ஆனால் வேதாகமத்தை நாம் வியாக்கியானம் செய்யும்போது மனித முயற்சியின் தேவையை இது நீக்காது. ஆவியானவர் நம்மை ஒளியூட்டும் மிக சாதாரண வழியானது, நமது கடின உழைப்பின் வழியாகவோ அல்லது அதனுடன் இணைந்ததாகவோ இருக்கிறது. இந்த காரணத்திற்காக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேதாகம வியாக்கியானத்தை ஒரு மனித முயற்சியாக நாம் குறைக்கக்கூடாது என்றாலும், வேதாகமத்தை சரியாகப் புரிந்துகொள்ள மிகவும் கடினமாக உழைக்க ஒரு மிக முக்கியமான இடம் உள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, சில வட்டங்களில், கிறிஸ்துவின் நல்ல சீஷர்கள் வேதத்தை வாசிக்கத் தயாராகும்போது மனித முயற்சி போலத் தோன்றும் எதையும் குறைவாக மதிப்பிடுகிறார்கள். அதற்கு பதிலாக, அவர்கள் பெரும்பாலும் ஒரு ”ஆவிக்குரிய” அணுகுமுறையை விரும்புகிறார்கள், அங்கு ஒரு வேதாகம பகுதியின் செய்தி தேவனிடமிருந்து நேரடியாக செயலற்ற வாசகர்களுக்கு வருகிறது. பரிசுத்த ஆவியானவரை நாம் சார்ந்திருப்பதன் முக்கியத்துவத்தை இந்த விசுவாசிகள் சரியாக ஒப்புக்கொள்கிறார்கள். அதற்காக நாம் அவர்களைப் பாராட்டலாம். ஆனால் அவர்கள் மனித முயற்சியைத் தவிர்ப்பது நியாயமற்றது. 2 தீமோத்தேயு 2:15-ல் பவுல் இவ்வாறு எழுதினார்:

> நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு (2 தீமோத்தேயு 2 : 15).

இந்த வசனத்தில், பவுல் தீமோத்தேயுவை சத்திய வார்த்தையை சரியாகக் கையாளும் ஒரு மனிதராக இருக்குமாறு ஊக்குவித்தார். ஆனால் பவுல் தன்னுடைய கண்ணோட்டத்தை வெளிப்படுத்த பயன்படுத்திய உருவகத்தைக் கவனிக்கவும். தீமோத்தேயு ”ஊழியக்காரனாக” இருக்க வேண்டும். இங்கு அப்போஸ்தலன் *எர்கேட்ஸ் என்று* தமிழில் ஒலிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார், இது பெரும்பாலும் வயல் தொழிலாளர்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். தீமோத்தேயு தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டும், அல்லது சில மொழிபெயர்ப்புகள் சொல்வது போல, அவர் ”ஜாக்கிரதையுடன்” இருக்க வேண்டும்.

வேதத்தின் வியாக்கியான அறிஞரை ஜாக்கிரதையுள்ள, கடின உழைப்பாளியான களப்பணியாளருடன் ஒப்பிடுவதன் மூலம், பவுல் தீமோத்தேயுவை வேதத்தைப் படிப்பதில் வலுவான முயற்சியை மேற்கொள்ள ஊக்குவித்தார். ஆனால் உண்மையில் இதன் பொருள் என்ன? பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருப்பது நமது மனித முயற்சியுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறது?

> வேதத்தைப் புரிந்துகொள்வது பரிசுத்த ஆவியானவர் செய்யும் காரியம் என்றும், நாம் செய்யும் ஒன்று அல்ல என்றும் இருந்தால், வேதாகம வியாக்கியானம் செய்வதைக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> குறித்து நாம் ஏன் கவலைப்படுகிறோம்? அதற்கான பதில் மிகவும் எளிமையானது. சோம்பேறித்தனத்திற்கு தேவன் பரிசு கொடுப்பதில்லை. பிரசங்கிக்கத் தயாராகாத ஊழியக்காரரை தேவன் அபிஷேகம் செய்வதில்லை. தேவனுடைய வேலையில் ஈடுபடுவதற்கு விடாமுயற்சி தேவைப்படுகிறது, ஏனென்றால் தேவன் நம் மூலம் மட்டுமல்ல, அவர் நம்மிலும் வேலை செய்கிறார்... வேதாகம வியாக்கியானத்தின் செயல்பாட்டில், என்ன நடக்கிறது என்பது வேதம் என்ன சொல்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளும் ஒரு அறிவாற்றல் விஷயம் மட்டுமல்ல, தேவன் நம்மில் செய்யும் ஒரு பரிசுத்தப்படுத்தும் செயல்முறையும் உள்ளது, இதனால் இந்த குறிப்பிட்ட பகுதி என்ன சொல்கிறது என்பதைப் புரிந்து கொள்ளும் நபர்களாக மட்டுமல்லாமல், ஆனால், நாம் எப்படிச் சிந்திக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறா**ரோ**, அவர் நம்மை எப்படிச் சிந்திக்க வேண்டும் என்று நம்மை வடிவமைத்தாரோ, அப்படியே சிந்திக்க வேண்டும், விஷயங்களை அவருடைய வழியில் பார்க்க வேண்டும்.
>
> – Dr. கேரி வின்ஸான்ட்

பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்கிறோம் எனபதால் வேதாகமத்தை வியாக்கியானம் செய்யும்போது நாம் செயலற்றவர்களாக இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. உண்மையில், பொறுப்பாக வியாக்கியானம் செய்தல் கடின உழைப்பை உள்ளடக்கியது. ஆவியைச் சார்ந்திருப்பது அவர் வழங்கிய கருவிகள் மற்றும் வாய்ப்புகளைச் சார்ந்திருப்பதை உள்ளடக்கியது என்று கூட நாம் சொல்லலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, பரிசுத்த ஆவியானவர் வாசகனின் மனித முயற்சி உட்பட மனித வழிமுறைகள் மூலம் தொடர்பு கொள்ள வேதாகமத்தை வடிவமைத்தார்.

சொல்லப்போனால், பரிசுத்த ஆவியானவர் பொதுவாக நாம் ஆயத்தத்தில் செய்யும் முயற்சிகளின் மூலம் நம்மை ஒளியூட்டுகிறார். நம் சரீரங்கள் பொதுவாக உணவை உண்ணும் செயல்முறையின் மூலம் ஊட்டச்சத்தைப் பெறுவதைப் போலவே, ஆவியானவர் பொதுவாக அவரது வார்த்தையைப் பற்றிய முழுமையான புரிதலைக் கொடுக்க நம் வாசிப்பு மற்றும் படிப்பின் செயல்முறையின் மூலம் செயல்படுகிறார்.

வேதத்தின் சில பகுதிகளுக்கு மற்ற பகுதிகளை விட அதிக மனித முயற்சி தேவைப்படுகிறது என்பது வேதாகமத்தின் பெரும்பாலான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாசகர்களுக்கு தெளிவாக இருக்க வேண்டும். அளவுகோலின் ஒரு முனையில், சில பகுதிகள் மிகவும் தெளிவாக உள்ளன, அவற்றைப் புரிந்துகொள்ள மிகக் குறைந்த முயற்சியே தேவைப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக, புராட்டஸ்டன்டுகள் இரட்சிப்பிற்காக நம்பப்படுவதற்கும் கீழ்ப்படிவதற்கும் அவசியமானவை வேதாகமத்தில் ஏதோ ஒரு இடத்தில் தெளிவாக உள்ளன, அதை கிட்டத்தட்ட அனைவரும் புரிந்து கொள்ள முடியும் என்று சரியாகக் கருதினார்கள். மறுமுனையில், வேதாகமத்தின் பல பகுதிகள் மிகவும் கடினமாக உள்ளன, மேலும் சிலவற்றை முழுமையாக புரிந்துகொள்வது கூட சாத்தியமற்றதாக இருக்கலாம்.

ஆனால் நடைமுறையில் சொல்வதானால், வேதாகமத்தின் பெரும்பாலான பகுதிகள் இந்த இரண்டு உச்சங்களுக்கும் இடையில் உள்ளன. வேதாகமத்தின் தெளிவான பகுதிகளுக்கு பொதுவாக ஒப்பீட்டளவில் குறைவான மனித முயற்சியே தேவைப்படுகிறது. ஆனால் வேதாகமத்தில் மிகவும் கடினமான பகுதிகளை நாம் கையாளும்போது, அதிக முயற்சி தேவைப்படுகிறது.

வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்கு ஆயத்தமாவதில் மனித முயற்சியின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதோடு மட்டுமல்லாமல், தேவன் பொதுவாக நம் மனித முயற்சியின் மீது கொண்டுவரும் சில முக்கிய தாக்கங்களைப் பற்றி அறிந்துகொள்ளவும் இது உதவுகிறது.

## தாக்கங்கள்

இன்று நல்ல வேதாகம வியாக்கியான அறிஞர்களைத் தடுக்கும் ஒரு விஷயம் இருக்கிறது என்றால், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் வெளிப்புற தாக்கங்களை பிரதிபலிக்காத வழிகளில் வேதாகமத்தைப் படிக்க முடியும் என்று நினைப்பதேயாகும். எப்படியாவது நம் வாழ்க்கை அனுபவங்களில் இருந்து விடுபட்டு, எந்த கருத்தும் மனதில் இல்லாமல் வெறுமனே வேதவாக்கியங்களுக்குச் செல்லலாம் என்று நினைக்கிறோம். ஆனால் வேதாகம வியாக்கியானத்தில் நமது மனித முயற்சியைப் பற்றி நினைவில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயங்களில் ஒன்று என்னவென்றால், நாம் எவ்வளவு கடினமாக முயற்சி செய்தாலும், எண்ணற்ற தாக்கங்களால் பாதிக்கப்பட்ட வேதாகமங்களை நாம் எப்போதும் அணுகுகிறோம். இந்த தாக்கங்களைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறோமோ, அந்த அளவுக்கு அவை நேர்மறையானவையா அல்லது எதிர்மறையானவையா, அவை நமக்கு உதவுகின்றனவா அல்லது வேதத்தை வியாக்கியானம் செய்யும்போது அவை நமக்குத் தடையாக இருக்கின்றனவா என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்கு நாம் ஆயத்தமாகும்போது நாம் எடுக்கும் முயற்சிகளில் மூன்று முக்கிய தாக்கங்களை நாம் கருத்தில் கொள்வோம். இந்த தாக்கங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை, ஆனால் எளிமைக்காக அவற்றை தனித்தனியாக நடத்துவோம். நாம் முதலில் குறிப்பிடுவது வேதாகமத்தின் முந்தைய விளக்கவுரையாகும்.

## விளக்கவுரை

இந்த தொடரின் நோக்கங்களுக்காக, விளக்கவுரையை பின்வருமாறு வரையறுப்போம்:

> குறிப்பாக வரலாற்றுச் சூழல், இலக்கிய வடிவங்கள், இலக்கணம் மற்றும் சொற்களஞ்சியத்தின் பயன்பாடு, இறையியல் அமைப்பு போன்ற விஷயங்களைப் பார்ப்பதன் மூலம்

வேத பகுதிகளிலிருந்து அர்த்தம் பெறுதல் விளக்கவுரையைப் பற்றி நாம் பல விஷயங்களைச் சொல்லலாம் என்றாலும், இப்போதைக்கு, கடந்த காலத்தில் நாம் செய்த விளக்கவுரை வியாக்கியான பணிக்கு நம்மைத் தயார்படுத்த உதவுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

வேதாகமத்தின் விளக்கவுரையுடன் நாம் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஈடுபாடும் வேதத்தின் மேலதிக வியாக்கியானத்திற்கு நம்மைத் தயார்படுத்துகிறது. வேதத்தை படிப்பதிலிருந்து நாம் வளர்த்துக்கொள்ளும் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மைகள் அடுத்த முறை வேதாகமத்திற்குச் செல்லும்போது நம்மை பாதிக்கின்றன. எடுத்துக்காட்டாக, நாம் ஒவ்வொரு முறையும் வேதாகம சொற்களையும் இலக்கணத்தையும் படிக்கும்போது, வேதாகமத்தின் இந்த அம்சங்களை மிகவும் பொறுப்புடன் கையாளும் திறனை அதிகரிக்கிறோம். வேதாகமத்தின் இலக்கிய வகைகளான கதையாடல்கள், பிரமாணங்கள், கவிதைகள், தீர்க்கதரிசனங்கள், நீதிமொழிகள் போன்றவற்றைப் புரிந்துகொள்ள நாம் பணியாற்றும்போது, பிற்காலத்தில் அவற்றைப் புரிந்துகொள்வதற்கு நாம் நன்கு தயாராக இருக்கிறோம். வேதத்தின் பண்டைய வரலாற்றைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளும்போது, மேலும் புரிதலுக்காக வேதாகமத்திற்குத் திரும்ப நாம் தயாராக இருக்கிறோம். வேதாகமத்தின் விளக்கவுரையில் நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் மேலதிக ஆய்வுக்கு நம்மை ஆயத்தப்படுத்த உதவுகிறது.

வியாக்கியானத்தில் நமது மனித முயற்சிகளை பாதிக்கும் இரண்டாவது வகை தாக்கமானது சமூகத்துடன் நமக்கு இருக்கிற தொடர்பு ஆகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## உரையாடல்

வேதாகமத்தைப் புரிந்துகொள்வதற்கான நமது முயற்சிகளில், மற்றவர்களுடனான தொடர்பு மிகவும் செல்வாக்கு மிக்கதும், அடிக்கடி குறைத்து மதிப்பிடப்பட்ட தாக்கங்களில் ஒன்றாகவும் இருக்கிறது. நாம் அனைவரும் வேதத்தின் நேரடி விளக்கவுரையில் ஈடுபட விரும்புகிறோம். ஆனால் நாம் அதை உணர்ந்தாலும் உணராவிட்டாலும், மற்றவர்களுடனான நமது தொடர்புகளால் பாதிக்கப்படாமல் வேதத்தை வியாக்கியானம் செய்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. இது ஒரு நல்ல விஷயம்.

வேதாகமத்தை நாம் வியாக்கியானம் செய்யும்போது தற்போதைய உலகத்திலிருந்தும் கடந்த காலத்திலிருந்தும் நமக்கு உதவக்கூடிய, பெரும் வரங்களையும் நுண்ணறிவுகளையும் மற்றவர்கள் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து பெற்றுள்ளனர். அவர்கள் மதிப்புமிக்க மேற்கோள் புத்தகங்களை உருவாக்கியுள்ளனர். அவர்கள் நமக்கு தெய்வீக ஆலோசனையை வழங்குகிறார்கள். அவை வேதாகம மொழிகள், இலக்கியம், வரலாறு மற்றும் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளவும் செயல்படுத்தவும் உதவும் அனைத்து வகையான பிற விஷயங்களையும் பற்றி நமக்கு கற்பிக்கின்றன. நாம் கையில் வைத்திருக்கும் வேதாகமங்கள் கூட மற்றவர்களிடமிருந்து நமக்கு வந்துள்ளன. அறிஞர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பதிப்பாசிரியர்கள், பதிப்பாளர்கள் ஆகியோரின் படைப்புகள் மூலம் அவை நம்மிடம் வந்துள்ளன.

இதற்கு அப்பால், நம்மில் பெரும்பாலானோர் நம்முடைய சபைகள் மற்றும் சபைப்பிரிவுகள் உட்பட நாம் வீடாக எண்ணும் குறிப்பிட்ட கிறிஸ்தவ சமூகங்களைக் கொண்டிருக்கிறோம். வேதாகமத்தை வாசிக்கும் விதத்தையும் புரிந்துகொள்ளும் விதத்தையும் பாதிக்கும் பொதுவான மரபுகளை இந்த சமூகங்கள் பகிர்ந்து கொள்கின்றன. போதகர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற தனிப்பட்ட விசுவாசிகளிடமிருந்து நாம் பெறும் உள்ளீடு நமக்கு பல வழிகளில் உதவுகிறது.

மற்றவர்களின் வெற்றிகள், தோல்விகள் மற்றும் நுண்ணறிவுகள் மூலம் பல மதிப்புமிக்க விஷயங்களை நாம் கற்றுக்கொள்கிறோம். நம்மைப் போன்றவர்களிடமிருந்தும், நம்மிலிருந்து வேறுபட்டவர்களிடமிருந்தும், கடந்த காலத்திலிருந்தவர்கள் மற்றும் நிகழ்காலத்திலிருந்தவர்களிடமிருந்தும், தனிப்பட்ட முறையில் நமக்குத் தெரிந்தவர்களிடமிருந்தும், நாம் ஒருபோதும் சந்திக்காதவர்களிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்கிறோம். நாம் அதை அங்கீகரிக்கிறோமோ இல்லையோ, வேதாகமத்தைப் பற்றிய நம்முடைய வியாக்கியானங்கள் அனைத்தும் மற்றவர்களால் ஆழமாக பாதிக்கப்படுகின்றன மற்றும் பாதிக்கப்படவும் வேண்டும்.

ஆயத்தத்தில் நம்முடைய முயற்சிகளில் மூன்றாவது பெரிய தாக்கம் நம்முடைய தனிப்பட்ட கிறிஸ்தவ அனுபவமாகும்.

## அனுபவம்

கிறிஸ்தவர்களாக நம் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் எதுவும் நமது கிறிஸ்தவ அனுபவத்தின் ஒரு பகுதியாகும் என்று சொல்வது நியாயமானது, இதில் நாம் ஏற்கனவே கூறிய விளக்கவுரை மற்றும் மற்றவர்களுடனான தொடர்பு போன்ற விஷயங்களையும் உள்ளடங்கியுள்ளது. ஆகவே, நம்முடைய பாடத்தின் இந்த கட்டத்தில், நம்முடைய தனிப்பட்ட கிறிஸ்தவ அனுபவத்தைப் பற்றியோ அல்லது தேவனோடு நடப்பதைப் பற்றியோ பேசும்போது நாம் சாதாரணமாக நினைக்கும் விஷயங்களில் கவனம் செலுத்த விரும்புகிறோம். கிறிஸ்தவ வாழ்க்கையின் இந்த தனிப்பட்ட அம்சங்கள் வேதாகமத்தைப் பற்றிய நமது வியாக்கியானங்களுக்கு பல்வேறு வழிகளில் பங்களிக்கின்றன.

எடுத்துக்காட்டாக, நம்முடைய கிறிஸ்தவ வளர்ச்சியும் பரிசுத்தப்படுத்துதலும் வேதத்தை வியாக்கியானம் செய்யும் திறனை அதிகரிக்கின்றன; நாம் ஆழமாக வாழும் வழிகள் வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ளும் நமது திறனைப் பாதிக்கின்றன. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் தேவனுக்குப் பிரியமான வழிகளில் சிந்திக்கவும், செயல்படவும், உணரவும் முயற்சி செய்து உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது அவர்கள் பொதுவாக வேதாகமத்திலிருந்து மேலும் கற்றுக்கொள்வதற்கு சிறப்பாக தயாராக இருப்பதைக் காண்கிறார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தைக்கு இணங்க நம் வாழ்க்கையை நாம் கொண்டு வரவில்லை என்றால், வேதத்தைப் படிப்பது பெரும்பாலும் தவறான புரிதலுக்கும் தவறான பயன்பாட்டிற்கும் வழிவகுத்து விடும்.

நமது கடந்த கால அனுபவங்கள் பொறுப்புடன் வியாக்கியானம் செய்வதற்கான நமது திறனையும் பாதிக்கலாம். எல்லா விசுவாசிகளுக்கும் நாம் சிந்தித்து, உணர்ந்து நடந்து கொள்ளும் விதத்தை வடிவமைக்கும் அனுபவங்கள் உள்ளன. இந்த அனுபவங்கள் வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்கான நமது முயற்சிகளை பாதிக்கின்றன. எடுத்துக்காட்டாக, செல்வச் செழிப்பான சூழலில் வளர்ந்த ஒருவருக்கு லூக்காவின் சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்ட ஏழைகள் மீதான அக்கறையைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கலாம். கௌரவத்தை வலியுறுத்தும் கலாச்சாரத்தில் வளர்க்கப்பட்ட ஒருவர் அவமானம் தொடர்பான பகுதிகளைப் புரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இதற்கு அப்பால், ஒவ்வொரு நபருக்கும் வெவ்வேறு தனிப்பட்ட பலங்கள் மற்றும் பலவீனங்கள், வெவ்வேறு திறன்கள் மற்றும் வெற்றுப் புள்ளிகள்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரிசுத்த ஆவியானவரிடமிருந்து பெற்ற வெவ்வேறு வரங்கள் மற்றும் வெவ்வேறு பாவங்கள் இருக்கலாம். வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்கும் பிரயோகிப்பதற்கும் வரும்போது இந்த விஷயங்கள் அனைத்தும் ஏதோ ஒரு விதத்தில் நமது திறனை பாதிக்கின்றன.

> வேதம் உட்பட பொதுவான உண்மையைப் புரிந்துகொள்ளும் நமது திறனை நமது பாவங்கள் தடுக்கின்றன. நம்முடைய பாவ சுபாவத்தில் அநியாயத்தினால் சத்தியத்தை அடக்குகிறோம் என்று வேதம் சொல்கிறது. எனவே உண்மையைப் புரிந்துகொள்ளும் திறனில் நமது பாவம் ஒரு சிதைந்த விளைவைக் கொண்டுள்ளது. எனவே நாம் வேதாகமத்திற்கு வரும்போது, பாவத்தின் முறுக்கு விளைவு இல்லாமல் அதைப் புரிந்துகொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவுகிறார். இது நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்க உதவும் காரியங்களில் ஒன்றாகும்.
>
> – Dr. கே. எரிக் தோனேஸ்

> நாம் வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதை பாவம் தடுக்கக்கூடும், ஏனென்றால் மக்கள் தாங்கள் கண்டுபிடிக்க விரும்புவதை வேதாகமத்தில் கண்டுபிடிக்க முனைகிறார்கள். எடுத்துக்காட்டாக, சில நூற்றாண்டுகளுக்கு முன்பு அடிமைத்தனத்தை நியாயப்படுத்தும் விதத்தில் வேதத்தை வியாக்கியானம் செய்ய அடிமை முதலாளிகள் ஒரு வழியைக் கொண்டு வந்தனர். அவர்களின் சொந்த பொருளாதார நலன்களுக்காக அது இருந்தது, எனவே அடிமைகளைப் பற்றி பிரசங்கிக்க அனுமதித்தால் அடிமைகள் தங்கள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதை எபேசியர் 6:5 இலிருந்து பிரசங்கிக்கப்படுவதை விரும்புவார்கள். ”எஜமானர்களே, நீங்கள் அவர்களுக்கும் அவ்வாறே செய்கிறீர்கள்” என்று 6:9 கூறுவதை அவர்கள் கவனிக்க மாட்டார்கள். நீங்கள் உண்மையில் அதை தீவிரமாக எடுத்துக் கொண்டால், அதாவது எஜமானர்கள் உண்மையில் தங்கள் அடிமைகளுக்கு சேவை செய்ய வேண்டியிருந்தால் அடிமைத்தனம் நீண்ட காலம் நீடிக்காது. இது பொருளாதார ஊக்குவிப்புகளை அழிக்கிறது. ஆனால் அவர்கள் வாழும் முறையை நியாயப்படுத்தும் முயற்சியில் மக்கள்

வேதாகமத்தை அணுகும்போது, அவர்கள் அந்த வழியில் தான் எப்பொழுதும் வேதாகமத்தைப் படிப்பார்கள். சில நேரங்களில் மக்களுக்கு நேர்மாறான பிரச்சனை உள்ளது. அவர்கள் எப்போதும் கண்டனத்தை எதிர்பார்க்கும் ஒரு அமைப்பிலிருந்து வரலாம் அல்லது அவர்கள் எப்போதும் குற்றத்தை எதிர்பார்க்கலாம், மேலும் அவர்கள் வேதத்தையும் அப்படியே படிக்கிறார்கள். நம் மனதில் ஏதோ அர்த்தத்தை ஏற்கனவே வைத்துக்கொண்டு, வேதாகமத்தைப் படிப்பதற்குப் பதிலாக, முடிந்தவரை, அந்த வசனத்தின் செய்தியானது உண்மையிலேயே என்ன என்பதைக் கேட்க முயற்சிக்க வேண்டும்.

– Dr. கிரெய்க் எஸ். கீனர்

# முடிவுரை

வியாக்கியானத்திற்கான நமது ஆயத்தம் பற்றிய இந்தப் பாடத்தில், வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்கு முன்பு நாம் செய்ய வேண்டிய ஆயத்தங்களின் இரண்டு முக்கியமான அம்சங்களைப் பார்த்தோம். இயற்கையான ஏவுதல் மற்றும் ஆவியின் ஒளியூட்டுதல் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் பரிசுத்த ஆவியின் மீதான நமது சார்புநிலையை நாம் கருத்தில் கொண்டுள்ளோம். மனித முயற்சியின் முக்கியத்துவத்தைப் பார்ப்பதன் மூலமும், தேவன் பொதுவாக நம் வியாக்கியான முயற்சிகளில் கொண்டு வரும் சில தாக்கங்களை ஆய்வு செய்வதன் மூலமும் மனித முயற்சியின் அவசியத்தை நாம் வலியுறுத்தியுள்ளோம்.

வேதத்தை வியாக்கியானம் செய்வதற்கான ஆயத்தத்திற்கு நாம் பரிசுத்த ஆவியைச் சார்ந்திருக்கவும் வேண்டும் மற்றும் அதிக மனித முயற்சியை மேற்கொள்ளவும் வேண்டும். பரிசுத்த ஆவியானவர் வேதவசனங்களை ஏவினார் என்பதாலும், வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்வதற்கு நம் மனதையும் இருதயங்களையும் ஒளிரூட்டுவதற்காக பிதா அவரை நம்மிடம் அனுப்பினார் என்பதாலும் நாம் வேதத்தை மனதாரவும் ஜெபத்துடனும் அணுக வேண்டும். ஆனால் அதே நேரத்தில், நாம் வாசிப்பதன் மூலமும், படிப்பதன் மூலமும், மற்றவர்களுடன் தொடர்புகொள்வதன் மூலமும், ஒவ்வொரு படியிலும் வேதவசனங்களை நம் சொந்த வாழ்க்கையில் பயன்படுத்துவதன் மூலமும் நம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சொந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டுள்ளார். வேதாகமத்தை வியாக்கியானம் செய்வது என்பது நம் வாழ்நாள் முழுவதும் நாம் பின்பற்ற வேண்டிய ஒரு சிக்கலான திட்டமாகும், எனவே முடிந்தவரை நம்மை முழுமையாக ஆயத்தப்படுத்துவதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். தேவனுடைய ஆவியிலும் மனித முயற்சிகளிலும் நாம் எவ்வளவு கவனம் செலுத்துகிறோமோ, அந்த அளவுக்கு வேதத்தை வியாக்கியானம் செய்வதற்கு நாம் தயாராக இருப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.